**செ.வெ.எண் - 41** **நாள் -09.02.2026**

**ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ச.கந்தசாமி இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு-**

----

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் (TNCDW), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் (TNSRLM), ஈரோடு மாவட்ட இயக்க மேலாண்மை (DMMU) அலகிற்குட்பட்ட கீழ்காணும் வட்டார இயக்க மேலாண்மை அலகில் (BMMU) கிராமபுற பகுதிகளில் காலியாகவுள்ள கீழ்காணும் வட்டார ஒருங்கிணைப்பாளர் பணியிடத்திற்கு தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நிரப்பிட தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்: 16.02.2026.**

**வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் காலிப்பணியிடங்கள் விபரம்:**

| வ. எண் | வட்டாரம் | வட்டார ஒருங்கிணைப்பாளர் காலிப்பணியிட விபரம் | | |
|---|---|---|---|---|
| | | ஒப்பளிக்கப்பட்ட பணியிடம் | பணியில் உள்ளவர்கள் | காலிப்பணியிடம் |
| 1 | அம்மாபேட்டை | 5 | 3 | 2 |
| 2 | அந்தியூர் | 6 | 5 | 1 |
| 3 | சென்னிமலை | 4 | 2 | 2 |
| 4 | ஈரோடு | 4 | 3 | 1 |
| 5 | கொடுமுடி | 4 | 0 | 4 |
| 6 | மொடக்குறிச்சி | 6 | 3 | 3 |
| 7 | நம்பியூர் | 5 | 3 | 2 |
| 8 | பெருந்துறை | 6 | 3 | 3 |
| 9 | சத்தி | 6 | 4 | 2 |
| 10 | தாளவாடி | 6 | 3 | 3 |
| | **TOTAL** | **40** | **27** | **23** |

## வட்டார ஒருங்கிணைப்பாளர் பதவிக்கான வெளிசந்தை முறையில் (Outsourcing) நியமனம் செய்யும் வழிகாட்டு நெறிமுறைகள்:

| | |
|---|---|
| 1. | **கல்வித் தகுதி :**<br>ஏதேனும் ஒரு துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் MS-Office முடித்துள்ளமைக்கான சான்று (குறைந்தபட்சம் 3 மாதம்) அல்லது கணினி அறிவியல் Computer Science அல்லது கணிணி பயன்பாட்டியலில் (Computer Applications) பட்டம் பெற்றிருக்க வேண்டும். |
| 2. | **வயது**<br>16.02.2026 அன்று 30 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும். |
| 3. | **பணி அனுபவம்**<br>குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் (SHG), ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் பணியாற்றிய அனுபவம் இருக்க வேண்டும். |
| 4. | **குடியிருப்பு**<br>விண்ணப்பிக்கும் வட்டாரத்திலேயே குடியிருப்பவராக இருத்தல் வேண்டும். |
| 5 | **இதர நிபந்தனைகள்**<br>• இரு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும்.<br>• பணியில் நல்ல நற்சான்று பெற்றவராக இருக்க வேண்டும்.<br>• TNSRLM, Pudhuvaazhvu Project, IFAD Project மற்றும் இதர அரசு திட்டங்களில் ஏற்கெனவே பணியாற்றி நிர்வாக மற்றும் நிதிமுறைகேடு காரணமாக பணிநீக்கம் செய்யப்பட்டவராக இருக்க கூடாது.<br>• தேர்வானவர்கள் குறைந்தது 5 ஆண்டுகள் பணிபுரியும் நிலையில் இருக்க வேண்டும். மேலும் இப்பணி முற்றிலும் தற்காலிகமானதாகும்.<br>• தேர்வானவர்கள் வெளிச்சந்தை அடிப்படையில் (Outsourching) வட்டார அளவிலான கூட்டமைப்பு மூலம் நியமனம் செய்யப்படும்.<br>• மனுதாரரின் விண்ணப்பம் பரிசீலனை செய்யவோ அல்லது நிராகரிக்கவோ மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் இறுதி முடிவாகும். |

## பணிநியமனத்திற்கான நெறிமுறைகள்:

காலிப்பணியிடங்கள் அனைத்தும் வெளிச்சந்தை முறையில் (outsourching) நிரப்பப்படும். தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றவுடன், மாவட்ட தேர்வுக்குழு மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு, கல்வி, அனுபவ தகுதி மூலம் நேர்காணலுக்கு தேர்ந்கெடுக்கப்படுவர்.

## விண்ணப்பங்கள் சமர்பிக்க வேண்டிய முறை / முகவரி

மேற்காணும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் 16.02.2026 ஆம் தேதிக்குள் அரசு வேலை நாட்களில் காலை 10:00 மணிமுதல் மாலை 5:45 மணிவரை கீழ்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, பூமாலை வணிக வளாகம்,
குமலன்குட்டை, ஈரோடு மாவட்டம்.

**வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.**